அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 18/2020 (II)

எனது இலக்கம் : EST/2/05/POL/0087
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2025.05.26

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதமச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 2020.10.16 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் 2022.10.28 ஆம் தினத்தன்றான அரசாங்கச் சுற்றறிக்கை 18/2020 (I) தொடர்பில் உங்களின் அவதானத்தை செலுத்துகின்றேன்.

02. அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 இன் 2.1 பந்தியில் குறிப்பிடப்படும் மொழிக் கற்கைநெறியை கற்பதினூடாக அல்லது க.பொ.த (சா.த) இரண்டாம் மொழி சிங்களம்/தமிழ் பாடத்தினை சித்தியடைவதுடன் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 இன் 2.1 பந்தியில் குறிப்பிட்டுள்ள தொகுதிகளுக்கு உரிய மட்டத்தின்படி அரசகரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வாய்மொழிமூல பரிசோதனைக்கு தோன்றி அதில் சித்தியடைவதன் மூலம் அல்லது ஏனைய அரசகரும மொழித் தேர்ச்சியின் தேவையினை பூர்த்தி செய்வதற்கு இயலுமை கிடைக்கும்படி அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 திருத்தம் செய்வதற்கு மற்றும் ஏனைய அரசகரும மொழித் தேர்ச்சியினை பூர்த்தி செய்ய வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 (I) மூலம் 2024.10.16 ஆம் தினம் வரையில் வழங்கியிருந்த நிவாரண காலம் 2026.10.16 ஆம் தினம் வரையில் நீடிப்பதற்கு 2025.04.21 ஆம் தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அதன்படி அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 இன் 2.4 பந்தியின்படி 2.5 ஆக புதிய பந்தியொன்று உள்ளடக்கப்பட்டுள்ளது.

“2.5 மேற்படி பாடநெறிக்காக க.பொ.த (சா.த) இரண்டாம் மொழி சிங்களம்/ தமிழ் பாடம் சித்தியடைவதுடன் மேற்படி 2.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகுதிகளுக்கு உரிய மட்டத்தின்படி அரசகரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வாய்மொழிமூல பரிசோதனைக்கு தோன்றி அதில் சித்தியடைவதன் மூலம் உத்தியோகத்தர்களுக்கு ஏனைய அரசகரும மொழித் தேர்ச்சித் தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட சந்தர்ப்பம் உரித்தாகும்.”

04. புதிய தகைமை தொடர்பிலும் திருத்தப்பட்ட நிவாரண காலம் தொடர்பிலும் உரிய உத்தியோகத்தர்களை அறிவுறுத்துமாறும் இத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்./ எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 011-2693886
தொலைநகல் : 011-2692158
மின்னஞ்சல் முகவரி : ade-ii@pubad.gov.lk